**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்</u>**

**<u>DEPOSITION OF WITNESSES</u>**

(Chapter XXIII Cr.P.C)

**STC NO. 146/2025**

**PW. 1**

**Date: 20.04.2026**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பாலகிருஷ்ணன் | வயது | |
| கணவர்/தந்தை பெயர் | கந்தசாமி | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **20TH April 2026**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது. எதிரி ஆஜர். கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

9. தற்போது என்னிடம் காட்டப்படும் மா.சா.ஆ.2 ல் உள்ள பெயர் மற்றும் தொகையை யார் எழுதியது என்றால் அந்த கையெழுத்து என்னுடையது இல்லை. என் முன்னிலையில் எதிரி அதை எழுதினாரா, அல்லது எழுதிகொண்டு வந்தாரா என்றால் எழுதிக்கொண்டு வந்தார். அதை யார் எழுதியது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் 2021 ஆம் ஆண்டு ஆரோக்கியராஜ் என்பவரிடம் ஒரு காரை விலைக்கு வாங்கினேன் என்றால் இல்லை.

10. நான் ஆரோக்கியராஜ் என்பவரிடம் இருந்து பயன்படுத்தப்பட்ட காரை வாங்கினேன் என்றாலும் அதற்காகத்தான் நான் எதிரிக்கு ரூ.1 லட்சத்தை, 3 தவனைகளாக அவரது வங்கி கணக்கிற்கு அனுப்பினேன் என்றால் இல்லை. நான் எதிரிக்கு 19.10.2021 மற்றும் 20.10.2021 ஆகிய தேதிகளில் அனுப்பிய ரூ.1 லட்சம்

பணம், அந்த காரிற்கு நான் எதிரிக்கு செலுத்தியது தான் என்றாலும் எதிரி என்னிடம் கடன் பெறவில்லை என்றாலும் சரியல்ல.

11. தற்போது என்னிடம் காட்டப்படும் கடிதத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான் என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் கடிதம் 07.07.2020 அன்று எதிரிக்கு நான் கைப்பட எழுதிய கடிதம் தான் என்றால் சரியல்ல. நான் 07.07.2020 அன்று எதிரிக்கு நான் கடிதம் எழுதிய போது தான் அவரிடம் இருந்து நிறப்பப்படாத காசோலையையும் நான் வாங்கி கொண்டேன் என்றால் சரியல்ல. நான் 07.07.2020 அன்று தான் எதிரிக்கு ரூ.5 லட்சம் கடன் கொடுத்தேன் என்றாலும், அதற்காக எழுதப்பட்ட கடிதம் தான் அந்த கடிதம் என்றாலும் சரியல்ல.

12. நான் எந்த தேதியில் ரூ.5 லட்சத்தை எதிரிக்கு கடந் கொடுத்தேன் என்றால் 12.04.2022 அன்று கொடுத்தேன். அன்றைய தேதியில் நான் எதிரியிடம் இருந்து கடன் உறுதிப்பத்திரம் எழுதி வாஙகினேனா என்றால் வாங்கினேன். அந்த கடன் உறுதி பத்திரம் 12.04.2022 அன்றைய தினமே எழுதப்பட்டதா என்றால் ஆமாம். அந்த கடன் உறுதி பத்திரம் வெற்று தாளில் எழுதிப்பட்டதா, அல்லது முத்திரை தாளில் எழுதப்பட்டதா என்றால் கடனுறுதி படிவம் பத்திரத்தில் தான் எழுதப்பட்டது.

13. அதில் வருவாய் வில்லை ஒட்டப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அந்த 12.04.2022 தேதியிட்ட கடனுறுதி பத்திரத்தை எங்கு வைத்து எழுதினோம் என்றால் நெய்வேலி அஞ்சலக வளாகத்தில் வைத்து எழுதப்பட்டது. யார் அதை பூர்த்தி செய்தது என்றால் அவர் கொடுத்த போதே நிரப்பி தான் இருந்தது. யார் எழுதினார் என்று தெரியாது. அந்த பத்திரத்தை யார் வாங்கினது என்றால் எதிரி தான் வாங்கினார்.

12.04.2022 அன்று என்னுடைய வசிப்பிடம் எதுவென்றால் நெ.5 எ, டைப்–2 குடியிருப்பு, ஜி.எச் கேம்பஸ், நெய்வேலி டவுன்ஷிப்.

14. அப்போது நான் பணியில் இருந்தேனா என்றால் இல்லை. நான் அன்றைய தினம் ரூ.5 லட்சத்தை கையில் பணமாக வைத்திருந்தேனா வைத்திருந்தேன். அந்த பணத்தை நான் வங்கியில் சேர்த்து வைத்திருந்தேனா, அல்லது கையில் வைத்திருந்தேனா என்றால் கையில் தான் சிறுக சிறுக வைத்திருந்தேன். அந்த பணத்தை எதற்காக சேர்த்து வைத்தேன் என்றால் என்னுடைய மகள் திருமணத்திற்காக சேர்த்து வைத்தேன். எப்போது என் மகள் திருமணம் நடந்தது என்றால் ஏப்ரல் 2025 ல் நடந்தது.

15. 2022 ம் ஆண்டு நான் என் மகளுக்கு திருமணம் வரன் பார்த்து கொண்டிருந்தேனா என்றால் ஆமாம். நான் ஏற்கனவே வருமான வரி செலுத்தி வருவதாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். என்னுடைய வருமான வரி கணக்கில் 2021 –2022 ஆண்டிற்கு வருமானம் எவ்வளவு காட்டியுள்ளேன் என்றால் நினைவு இல்லை. வருமான வரி கணக்கில் அப்போது கையிருப்பு தொகையாக எவ்வளவு காட்டி இருந்தேன் என்றால் நினைவில்லை.

16. நான் பொய்யான வருமான கணக்கை காண்பித்தால் வருமான வரி துறை என் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் 12.04.2022 அன்று எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு முன்பாக எதிரி என்னிடம் எப்போது கடன் கேட்டார் என்றால் அன்று தான் அவரது வேலை பாதியில் நிற்கிறது என்றும், மிகவும் அவசரம் என்று கேட்டதால் தான் நான் அந்த பணத்தை கொடுத்தேன்.

எத்தனை மணிக்கு என்னிடம் கடன் கேட்டார் என்றால், அவர் காலையில் கேட்டார், நான் மதியம் 02.00 மணிக்குள் கொடுத்துவிட்டேன்.

17. எதிரி காலை எத்தனை மணிக்கு என்னிடம் கடன் கேட்டார் என்றால் சரியாக நினைவில்லை. எதிரி என்ன வேலை செய்கிறார் என்றால், நெய்வேலி நிலகரி சுரங்கத்தில் ஒப்பந்ததாராக உள்ளார். என்ன ஒப்பந்ததாராக இருந்தார் என்றால் எலக்ட்டிரிக்கல் ஒப்பந்ததாராக இருந்தார். அவரது வேலையில் என்ன அவசரத்திற்காக ரூ.5 லட்சத்தை என்னிடம் கடனாக கேட்டார் என்றால் அவர் சாலையில் மின் ஒயர்களை புதைத்து, வேலைகள் செய்வதை நான் பலமுறை பார்த்துள்ளேன். அந்த வேலை இருப்பதாக தான் என்னிடம் பணம் கேட்டார்.

18. 12.04.2022 அன்று எழுதப்பட்ட கடனுறுதி சீட்டில் என்ன தேவைக்காக எதிரி என்னிடம் கடன் பெறுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவசர தேவை என்று தான் குறிப்பிட்டுள்ளார். ஏன் 12.04.2022 தேதியிட்ட கடனுறுதி சீட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் காசோலையை கொடுத்துவிட்டு, கடனுறுதி சீட்டை எதிரி திரும்ப பெற்றுகொண்டார். அப்படியென்றால், எதிரி என்னிடம் இரண்டு காசோலைகளை கொடுத்தாரா என்றால் இல்லை ஒன்று தான் கொடுத்தார்.

19. எதிரி எனக்கு 20.10.2021 அன்றும், 12.04.2022 அன்றும் இரண்டு கடனுறுதி சீட்டுக்களை எழுதி கொடுத்தாக நான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அந்த இரண்டு கடனுறுதி சீட்டுக்களையும் எதிரி திரும்ப பெற்றுகொண்டாரா என்றால், காசோலை கொடுக்கும்போது அந்த இரண்டையும் திரும்ப வாங்கிகொண்டார். 12.04.2022 கடனுறுதி சீட்டில் யாரெல்லாம் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால்

நினைவில்லை. 12.04.2022 அன்று எதிரி என்னிடம் பெற்றதாக நான் சொல்லும் ரூ.5 லட்சத்தை திரும்ப கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நேரில் சென்று கேட்டேன்.

20. நான் தற்போது கழிப்பட்டுரில் உள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு காலமாக அங்கு உள்ளேன் என்றால் சுமார் 3 ஆண்டுகளாக உள்ளேன். 2022 ஆம் ஆண்டில் இருந்தேனா என்றால் இல்லை. நான் 2022 ஆம் ஆண்டு தான் என் மனைவி பணியில் இருந்து ஓய்வு பெற்றார். அதன் பிறகு ஆத்தூரில் இரண்டு ஆண்டுகள் இருந்தேன். அதன் பிறகு தான் இங்கு வந்தேன். என் மனைவி ஓய்வு பெற்றவுடன் நெய்வேலியில் இருந்து கிளம்பிவிட்டோமா என்றால் 2023 ஆம் ஆண்டு தொடக்கத்தில் கிளம்பிவிட்டோம்.

21. நான் எப்போது நேரில் சென்று எதிரியிடம் பணத்தை திரும்ப கேட்டேன் என்றால் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாத்தில் இருந்து நேரில் கேட்டேன். அதன் பிறகு எப்போது கேட்டேன் என்றால் தொடர்ச்சியாக நேரிலும், போனிலும் கேட்டு தான் வந்தேன். நான் கழிப்பட்டூரில் இருந்து நேரடியாக நெய்வேலி சென்றேனா என்றால், இங்கிருந்தும் சென்றேன். ஆத்தூரில் இருந்தும் சென்றேன். என்னுடைய வழக்கின் படி அக்டோபர் 2022 வரை தான் எதிரி வட்டி கொடுத்து வந்துள்ளார் என்றால் சரிதான்.

22. நான் 2025 ஆம் ஆண்டு இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றாலும், இடைப்பட்ட 26 மாதங்களுக்கு நான் வட்டி கோரவில்லையா என்றால் நான் அவரை பலமுறை கேட்டேன் ஆனால் எதிரி கொடுக்கவில்லை. எதிரி எனக்கு வட்டி மட்டுமே ரூ.3 லட்சத்திற்கு மேல் கொடுக்க வேட்டியது இருக்கும் என்றாலும் அதற்காக நான்

உரிமையியல் வழக்கு அவர் மீது கொடுக்கவில்லை என்றால் எதிரி பணத்தை கொடுத்துவிடுவதாக சொல்லி வந்ததால் நான் வழக்கு தொடரவில்லை. 2024 ஆம் ஆண்டு காவல் துறையில் புகார் கொடுத்தேன்.

23. நான் காசோலையை பெற்றுகொண்டு கடனுறுதி சீட்டை எதிரிக்க திரும்ப கொடுத்த போதும், வட்டி தொகை நிலுவையில் தான் இருந்தது என்றாலும் சரிதான். ஒரு பெரிய வட்டி தொகை நிலுவையில் இருந்தபோது நான், கடனுறுதி சீட்டை திரும்ப கொடுக்க வேண்டிய அவசியம் என்ன என்றால் எதிரி காசோலையை கொடுத்த போது, நிலுவையில் உள்ள அசல் தொகைக்கு மட்டும் காசோலை கொடுப்பதாகவும், வட்டி தொகையை பிறகு தருவதாக சொல்லி தான் கடனுறுதி சீட்டை திரும்ப பெற்று கொண்டார்.

24. எதிரியின் மீது இருந்த நம்பிக்கையின் பேரில் தான் நான் கடனுறுதி சீட்டை திரும்பி கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். 2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இருந்து எதிரி வட்டி தொகையை கொடுக்காத நிலையில், நான் எந்த நம்பிக்கையில் எதிரிக்கு கடனுறுதி சீட்டை திரும்பி கொடுத்தேன் என்றால் அவர் தன்னை நம்பும் படி சொன்னதால் நான் நம்பிவிட்டேன். காசோலை எண்.011465 என்ற காசோலையை எதிரி 07.07.2020 அன்று தான் எனக்கு கொடுத்தார் என்றால் சரியல்ல. 20.01.2025 அன்று தான் கொடுத்தார்.

**கற்றறிந்த வழகக்றிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

NILAVARASAN KASI
Digitally signed by NILAVARASAN KASI

**District Munsif cum Judicial Magistrate,**
**Thiruporur.**